நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 340/2022**

**P.W.1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரி |
| தந்தை / கணவர் பெயர் | : | மாதேஷ் |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 42 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–(12.45 )

1. நான் தற்போது காவேரி கிராசில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர் என்னுடைய அப்பா கோபால். 2022 ம் வருடம் மாலை 06.00 மணியளவில் என்னுடைய அப்பா கோபால் பால் வாங்குவதற்காக மேட்டூரிலிருந்து ஈரோடு செல்லும் சாலையில் சைக்கிளை

தள்ளிக்கொண்டு காவேரி கிராஸ் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது அவருக்கு பின்னால் டெம்போ வந்து மோதியதாக எனக்கு சம்பவயிடத்தில் இருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள்.

2. தகவல் தெரிந்து சம்பவயிடம் வந்து நான் பார்த்தேன். எனது அப்பாவுக்கு தலையின் பின்பகுதியில் அடிப்பட்டு மயங்கி இருந்தார். அவரை ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்குவந்த போலீசார் என்னுடைய அப்பா மயக்க நிலையில் இருந்ததால் அருகிலிருந்த என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள்.

3. புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு எனது அப்பாவை அனுப்பி வைத்தார்கள். 16 நாட்கள் சேலம் அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்த எனது அப்பா கோபால் சிகிச்சைபலனின்றி இறந்துவிட்டார். போலீசார் சேலம் அரசு மருத்துவமனை வந்து பிரேத விசாரணை மேற்கொண்டு என்னை விசாரித்தனர்.

4. எதிரியை சம்பவம் நடந்த அன்று நான் பார்த்தேன். இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

5. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. சம்பவம் எப்படி நடந்தது என்று என்னால் நேரடியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று என்னால் நேரடியாக சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும்போது சம்பவ நடந்த இடம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எனக்கு தகவல் நேரடியாக வந்து சொன்னார்கள். குமார் என்பவர்தான் சம்பவத்தை பற்றி எனக்கு தகவல் சொன்னார்.

6. நான் சம்பவயிடம் போனப்பிறகு இரவு 08.00 மணியிருக்கும். போலீசார் புகாரை என் முன்னிலையில் தான் எழுதினார்கள். புகாரில் உள்ள விவரங்களை போலீசார் என்னிடம் படித்து காண்பித்தார்கள். போலீசார் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு இரவு 08.30 மணிக்கு வந்து என்னிடம் புகார் எழுதி கையெழுத்து வாங்கினார்கள்.

7. நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் புகார் வாங்கும்போது போலீசார் சுமார் 10 கையெழுத்து வாங்கினார்கள். எழுதிய தாள்களிலோ அல்லது எழுதாத தாள்களிலோ கையெழுத்து வாங்கினார்களா என்றால் மொத்தமாக கத்தையாக இருந்த தாள்களில் கையெழுத்து வாங்கினார்கள்.

8. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு முன்னரும், பிறகு இரண்டு நாட்கள் கழித்து மேட்டூர் அரசு மருத்துவமனையிலும் வந்து விசாரித்தனர். போலீசார் தனியாக எதுவும் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னர் எனது அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கு மேற்குப்புறமாக எங்கள் வீடு உள்ளது.

9. பேருந்து நிறுத்தத்திலிருந்து  இருந்து எங்கள் வீட்டிற்கு வர கிழக்கிலிருந்து மேற்காக சாலையை கடக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது எனது அப்பா கிழக்கிலிருந்து மேற்காக சைக்கிளில் தடுமாறிக்கொண்டு கவனக்குறைவால் சாலையை கடந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், இந்த விபத்திற்கு முழுக்காரணம் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.00)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என**

ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 340/2022**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | முனியம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–(01.05 )

1. நான் தற்போது காவேரி கிராசில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது வெளியே சத்தம்கேட்டு ஓடிவந்து பார்த்தேன். எனக்கு தெரிந்த கோபால் என்பவர் கீழேவிழுந்து கிடந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. டெம்போ

கோபால் மீது மோதியதாக சொன்னார்கள். சிறிது தூரம் துரத்தி சென்று டெம்போ ஓட்டுநரை பிடித்தார்கள். டெம்போ ஓட்டுநரை நான் பார்க்கவில்லை.

2. விபத்தில் கோபால் இறந்துவிட்டதாக தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. விபத்து நடந்த இடம் எனது வீட்டிலிருந்து சுமார் 50 அடி தள்ளியிருக்கும் என்றால் சரிதான். இறந்துபோன கோபால் எனக்கு தெரியுமா என்றால் எனது ஊரைச்சேர்ந்தவர். 03.03.2022 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது மேட்டுரிலிருந்து பவானி மெயின்ரோடு செல்லும் சாலையில் காவேரி கிராஸ் பேருந்து நிறுத்தம் அருகே கோபால் பால் வாங்குவதற்காக அவருடைய சைக்கிளை தள்ளிக்கொண்டு வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றதை நான் பார்த்தேன் என்றால் இல்லை.

4. அவருக்கு பின்னால் அதே ரோட்டில் அதே திசையில் இந்த வழக்கின் எதிரி ரகுபதி TN 40 F 5843 மகேந்திரா பிக்கப் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து கோபால் மீது மோதியதில் அவரது தலையில் பலத்த அடிப்பட்டது என்றும், அருகிலிருந்த நாங்கள் தான் அ.சா.1 க்கு தகவல் சொல்லி அவர் வந்து அவருடைய அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக போலீசார் விரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**இல்லை

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.10)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 340/2022**

**P.W.3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சத்யா |
| தந்தை / கணவர் பெயர் | : | சுப்ரமணி |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம்,ஜுலை மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.15 )

1. நான் தற்போது காவேரி கிராசில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இறந்துபோன கோபால் எனக்கு தெரிந்தவர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது எனக்கு தெரிந்தவர் போன் செய்து எனக்கு தெரிந்த கோபால் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக

சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது கோபால் கீழேகிடந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. டெம்போ கோபால் மீது மோதியதாக சொன்னார்கள். சிறிது தூரம் துரத்தி சென்று டெம்போ ஓட்டுநரை பிடித்தார்கள். டெம்போ ஓட்டுநரை நான் பார்க்கவில்லை.

2. விபத்தில் கோபால் இறந்துவிட்டதாக தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3. விபத்து நடந்த இடம் எனது வீட்டிலிருந்து சுமார் 100 அடி தள்ளியிருக்கும் என்றால் சரிதான். இறந்துபோன கோபால் எனக்கு தெரியுமா என்றால் எனது ஊரைச்சேர்ந்தவர். 03.03.2022 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் காவேரி கிராஸ் பஸ் ஸ்டாப்பில் நான் நின்றுக்கொண்டிருந்தபோது மேட்டுரிலிருந்து பவானி மெயின்ரோடு செல்லும் சாலையில் காவேரி கிராஸ் பேருந்து நிறுத்தம் அருகே கோபால் பால் வாங்குவதற்காக அவருடைய சைக்கிளை தள்ளிக்கொண்டு வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றதை நான் பார்த்தேன் என்றால் இல்லை.

4. அவருக்கு பின்னால் அதே ரோட்டில் அதே திசையில் இந்த வழக்கின் எதிரி ரகுபதி TN 40 F 5843 மகேந்திரா பிக்கப் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து கோபால் மீது மோதியதில் அவரது தலையில் பலத்த அடிப்பட்டது என்றும், அருகிலிருந்த நாங்கள் தான் அ.சா.1 க்கு தகவல் சொல்லி அவர் வந்து அவருடைய அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக போலீசார் விரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை –இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.20)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**